காதல் உலகிலே

மு. கருணாநிதி

தொகுத்தவர்;
ஆராய்ச்சிமணி

卐

அவனுசி வெளியீடு

卐

பதிப்புரிமை] விற்பனை உரிமை: [விலை அணா 3.

"பார்வதி பதிப்பகம்"
37, ஜி. ஏ. ரோடு, ● சென்னை-21

வேடனானேன்!....

தோழர் மு. கருணாநிதியின் கற்பனைச் சோலையிலே பூத்து மணம் வீசும் மலர்களில், தேடியலைந்து பல மலர் களைத் துருவி ஆராய்ந்து சேர்த்தத் தேன் துளிகள் தான் இவைகள்!

அறிவுத் தும்பி கட்டிய தேன் கூடு, அதனைப்பிய்த்து உங்கள் முன் வைக்கும் வேடர் வேலையே என்னுடையது!!

அந்தத் தேன் துளிகளை நீங்களும் சுவைத்துப் பாருங்கள் !!!

17, கந்தப்ப ஆச்சாரி தெரு.
புரசைவாக்கம்
சென்னை-7.

அன்பன்,
ஆராய்ச்சிமணி.

சென்னை "தில்லை அச்சகத்தில்" அச்சடித்தது.

காதல் உலகிலே

மு. கருணாநிதி

卐

அழகு ஊர்வலம்

அழகான பெண். ஒளி முகம் படைத்த உருக்குலையா மங்கை. வெள்ளை உடையால் அவள் அன்ன நடைக்கு அழகு சேர்க்கிறாள். சிவந்த கழுத்திலே ஒரு கறுப்பு மணி மாலை. அந்தக் கோதி முடித்தக் கூந்தலையுடைய கோதை--அப்பழுக் கற்ற யௌவனத்தின் தனித் தன்மை வாய்ந்த அழகு ஊர் வலம். இருள் படித்த தெருவிலே அவள் நடந்து செல்வது. வையத்து மண்ணுக்கு வரவிழைந்த வானத்துத் தாரகைதான் வந்துற்றதோ என எண்ணத் தோன்றியது.

குளிர்த் தென்றல்

அலங்காரமில்லாவிட்டாலும் அழகி. மேக் அப் இல்லா விட்டாலும் மேனியில் ஒரு லளித கலை, சுருக்கமாகக் கூற வேண்டுமானால் ஒரு குளிர்த் தென்றல்.

எழிலரசி

கன்னங்களிலே பொன்! இதழ்களின் இடுக்கிலே முத்து! கண்களிலே பசுமை! சிரிப்பிலே செங்கரும்பு! அசைவெல்லாம் காற்றில் ஆடும் கதிர்! இயற்கையின் வள மெல்லாம் உருக்கி வார்க்கப்பட்ட பேரழகி! எழிலரசி!

பாருங்கள்

இதோ நிற்கிறாள் பாருங்கள். மேகலையும் நற்சிலம்பும் பூண்டு மேனியெல்லாம் தங்க ஒளி கொண்டு வளமான யுவதி -வசீகர மங்கை—இதோ நிற்கிறாள் பாருங்கள்.

பொன்வாத்து

ஆகா! அவள் தானா? பொன் வாத்து என்று புகன்றீரே அவளை புலவர் மொழியிலே அன்னம் என்று சொல்லும். சொர்ணம் என்று கூறும். அடடா! சொக்கத் தங்கத்திலே உளிபட்ட இடம் போல பிரகாசிக்கும் கன்னங்கள்! அவள் இதழ்களைக் கோவைப் பழம் என்று எண்ணி கொத்துவதற்காக வளைந்த கிளி மூக்கு! மனிதனை மயக்குவதற்கே மாயனால் படைக்கப்பட்ட மாம்பழ மேனி!

பொன் விளக்கு

அன்புக்கரசி! அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவுருவே! அழித்தெழுதா சித்திரமே! ஆடிவரும் பொன் விளக்கே! கட்டாணி முத்தழகி! கண் கவரும் ரத்தினமே! உன் கண்ணில் நீர் என்றால் என் உள்ளம் கலங்குதய்யோ!

பார்!

இவைகளைப் பார்! முத்தும்—பவளமும், ரத்தினமும் —வைரமும், பதித்திட்ட ஆபரணங்கள்! பள பளக்கும் பட்டாடை! ஜொலிக்கும் வைரம்! மதிப்பு வாய்ந்த ரத்தினம்!

தேன் நிலவு!

ஆகா! இந்த அழகான நிலா வெளிச்சத்திலே இன்றையதினம் உம்முடன் நின்று கொண்டிருக்கிறேன். நாளைய தினம் இந்தத் தேன் நிலவை அனுபவிப்போம்.

புன்னகை

புயலை அடக்கும் தென்றல், எரிமலையை அணைக்கின்ற பனிக்கட்டி, கேள்விப்பட்டதே இல்லை நான். ஆனால் அந்தப் புதுமையான சக்தியை உன்னுடைய ஒரு புன்னகையிலேயே காண முடிகிறதே!

சேதி

உங்களிடம் ஒரு சேதி பேச வேண்டும். சேதியா? காதலன்—காதலி—கட்டிலறை சிற்றின்பக் கூடாரமே தவிர சேதி பேசும் இடமல்ல கண்ணே!

சுந்தர முகம்

சொர்க்கலோகம் போனாலும் அங்கே சொக்க வைக்கும் திலோத்தமை, மயக்கு மொழி மேனகா, அத்தனை பேரையும் உதறித் தள்ளிவிட்டு உன் சுந்தர முகத்தை நினைத்தபடி ஆகாயத்திலிருந்து குதித்திருப்பேனே!

நெருப்பு

நீ ஒரு புதுமையான நெருப்பு !

நெருப்பா?.........

ஆமாம்! உன்னை நீங்கினால் சுடுகிறது. நெருங்கினால் குளிர்கிறது.

காத்திருக்கிறேன்

உனக்காக நான் மட்டுமா காத்திருக்கிறேன். அதோ! வானத்துச் சந்திரிகையும் காத்திருக்கிறது, கோலப்பெண்ணே குளிர் மொழிப் பாவாய் !

பொய்

காதல் காந்தம் என்கிறார்கள். உள்ளங்களை ஒன்றாக இணைக்கும் கயிறு என்கிறார்கள். எல்லாம் பொய்யா?

எல்லாம் உண்மை! ஆனால் காதலன் காதலியைக் கைவிட்டு விட்டால் அவளுக்கு இதெல்லாம் பொய்யாகி விடும்.

பிறப்பிடம்

உண்மைக் காதல் வஞ்சகமற்றது. எவ்விடத்தும் சமத்துவம் பாராட்டக் கூடியது. உயர்வு தாழ்வு அதனிடம் இல்லை. வீரத்திற்கும் தியாகத்திற்கும் காதலே பிறப்பிடம் !

ருசிகண்ட பூனை

உதட்டில் தடவப்பட்ட தேனை நக்கினான், சுவைத்தான், தேனடையைத் தேடினான். ருசி கண்ட பூனை உரியைத் தாவாமலிருக்குமா?

வேதனை

வாழ்நாளின் வனப்பு மிக்க ஒரு பகுதி வீணே கழிவதென்றால்......? கொஞ்சும் மொழியும் — கோலாகலமும் அனுபவிக்க வேண்டிய பருவத்தில் ஊமையாக முடங்கிக் கிடப்பதென்றால்?......காதல் கீதத்திற்கு ஏற்ற இன்பக் கேளிக்கைக்குரிய இன்ப நாட்களில் நொண்டியாகி விடுவதென்றால்......? எந்தப் பெண்ணால் தான் தாங்கிக் கொள்ள இயலும் அந்த வேதனையை?......

காதல் இலக்கணம்

உனக்கு காதல் இலக்கணம் சொல்லித் தருகிறேன் கேள். பன்னீரிலே குளித்து—பழரசத்திலே நீந்தி—-கன்னியர் புடை சூழ கட்டிலறைக்குச் சென்றால் தான் வருவேன் என்று செல்வதல்ல காதல். காதல் ஒரு நிலவு! தென்றல் மாளிகைக்குமட்டுமல்ல—மண் குடிசைக்கும் வரும்!

இருந்தால்தான்

காதலுக்கும் கடலுக்கும் வேறுபாடில்லை. அவை காலத்தால் அழிவதுமில்லை என்ற உண்மை உணர்ந்து அவர்கள் வாழ்வு நடத்தினர். கடலிலே எழும் அலை போன்றது!

காதல்; அதன் கொந்தளிப்பிலே சிக்கியவர் எவரும் தப்புவது இல்லை! காதல் ஆணையும் பெண்ணையும் ஒன்றாக்கிக் காட்டும் ஒரு வசீகரமான வானவில்! பாலும் சாக்கரையும் சேர்ந்து உண்டான சுவையை எப்படிப் பிரிக்க முடியாதோ அதே போல்தான் காதல் உள்ளவர்களையும் பிரிக்க முடியாது. அது வும் உண்மைக் காதலாக இருந்தால்!

எதிர்பார்ப்பது

நட்சத்திரங்கள் கூட்டமாகத்தானிருக்கின்றன. ஆனால் அல்லி மலர் எதிர்பார்ப்பது நிலவைத்தானே!

கமல மலர்

கைகள் குவிவதும் விரிவதும் கமல மலர் போல் காட்சி யளிக்கிறது.

உன்னையும் அழைக்கிறேன்

வசந்தத்தின் ஸ்பரிசத்திலே வானம்பாடி பறக்காமலி ருக்குமா?

பறப்பதற்கு ஒரு இறக்கை போதாது! அதற்குத்தான் உன்னையும் அழைக்கிறேன்.

எத்தனை சுகம்

ஆயிரம் கிண்ணம் மதுவும் சரி. உன் அதரபானம் ஒரு துளியும் சரி.

யானையின் மத்தகம் போன்ற உன்தோளிலே சாய்வது தான் எத்தனை சுகம் எனக்கு!

காதல் வலை

இப்போது நினைத்தாலும் அரண்மனையிலே-பளிங்கு மண்டபத்திலே—வாழமுடியும். ஆனால் நீ வீசிய வலையிலே விழுந்து விட்டாள்.

நான் வீசவுமில்லை. அவள் விழவுமில்லை. நாங்கள் இருவருமே காதல் வலையில் சிக்கி விட்ட புறாக்கள்.

அந்த வலையை அறுத்து என் மகளை விடுவிக்க வேண்டும் விடுவித்த பிறகு அவளைத் துரத்தும் வல்லூறாக நீ இருக்கக் கூடாது.

துரத்த வேண்டிய தூரத்தில் அவள் இருக்கமாட்டாள் அவள் என் தோளில் தொத்தும் கிளி!

அமைதி

அந்த இன்ப மழையைப் பொழிந்திடும் குரல் நிச்சயமாக ஆண் குரலாயிருக்க முடியாது. குளிச்சி கொட்டும் பெண்ணின் குரல் தான். வீணை அதிர்வது போலவும் குழல்

ஒலிப்பது போலும் எழும்புகின்ற அமுதத்தொனி இளங் காற்றிலே அலையெழுப்பி பரிபூரணமான அமைதி நிறை சூழ் நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

தங்கப் புரு

புயலடித்தாலும் புரு அந்தக் கிளையைவிட்டுக் கிளம்பாது அதனால் வேடன் குறி பார்ப்பதற்குள் கிளையை வெட்டி விட்டால் புருவும் கிளையும் நீங்கள் வைத்த கண்ணிலே விழுந்து விடும், பிறகு கிளையை எடுத்து எறிந்து விட்டு, அந்தத் தங்கப் புருவை தங்கள் புருவாக்கிக் கொள்ளலாம்.

வெல்லத்தின் வார்ப்படம் (ஆற்றுங்கரையோரம்)

அதோ அவர் வருகிறாரடி. நீ போய்விடு!

வரட்டுமே! எனக்கொன்றும் வெட்கமில்லை!

எங்களுக்கிருக்குமடி! போய் விடடி!

சரி போகிறேன்! நான் குளித்து முடிவதற்குள் வந்து விடு வாயல்லவா?

வரும் வரைரயில் குளித்துக்கொண்டிரேன். வெல்லத் தாலா் செய்திருக்கிறது உன் உடம்பு தண்ணீரில் கரைந்து விட!

என் உடம்பு வெல்லமில்லை! இப்போது வந்து வர்ணிப்

பார் கற்கண்டே—தேனே—காய்ச்சியபாகே என்றெல்லாம். அப்போது எண்ணிப் பார். யாருடைய உடம்பு வெல்லத்தின் வார்ப்படமென்று!

கிழவின் அழகு

ஒரு கிழவியைப் பார்ப்பதாக வைத்துக்கொள். அப்போதும் உன்னைத்தான் கற்பனை செய்வேன். கிழவியின் கூந் தலைப்போல வெள்ளை உள்ளம். அவள் முதுகின் கூனல் மாதரி வளைந்த உன் புருவம். அவள் நடுங்கம் உடம்பு மாதரி...... நடுங்கும் உன் தங்க உடம்பு.

பாலைவனம்

அவர் குயில் கூவவேண்டியது இடம் குளிர் மலர்ச் சோலை என்கிறார். நான் இல்லை "குட்டிச் சுவற்றில்" என்று கூற முடியுமா?

அவர் உங்களை குளிர் மலர்ச் சோலை யென்று கூறி யிருக்கமாட்டார்.

எனக்கே தெரியுமே! நான் சோலைவனமல்ல—பாலை வனமென்று!

நீங்கள் பாலைவனமானல் நான் அதிலே வளரும் பேரீச்சை மரம்!

பாலைவனத்திலே ஒட்டகம் கூட ஆதாரத்தை சேமித்து வைத்துக் கொண்டு தான் பயணம் போகுமாம். நானே வாழ்

க்கைப் பயணத்தைத் தொடங்குவதற்கே வகையற்றவன். வழி தெரியாதவன்.

அதிசயமல்ல!

ஆரணங்குகளின் மயக்கம் விட்டவர்களே ஆஸ்ரம வாசிகளாக முடியுமென்பார்கள். நானோ அந்த மயக்கத்தாலே கட்டுண்டு ஆண்டியாகி இருக்கிறேன்.

அதிசயமல்ல! அரண்மனையைவிட்டு ஆரண்யம் வந்தான் விசுவாமித்திரன். அங்கும் விட்டபாடில்லை அழகிகளின் தொல்லை. அவன் தவத்தின் மேன்மைக்கோ எல்லை--மேனகா பெற்றகிள்ளை!

எச்சரிக்கிறேன்

கையிலே கிடைத்த கனி—கண்ணியில் அகப்பட்ட பறவை—கபோதிகள் கூட விடமாட்டார்கள். உன்னிடம் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருப்பது—மலரைக் கசக்கி முகர்ந்தால் மணம் இருக்காது என்ற காரணத்திற்காகத் தான்—எச்சரிக்கிறேன். பொறுமையை சோதிக்காதே!

விடமாட்டேன்

நீ எங்கு சென்றாலும் நான் விடமாட்டேன். வானம் பாடியாக நீ பறந்தால் உன்னை வட்டமிடும் பருந்தாக மாறுவேன். புள்ளி மானாக மாறித் துள்ளினால் புலியாகச் சீறிடுவேன். நீ கடைசியில் பிணமானால் கூட உன் சரீரத்தைத் தொட்டெரிக்கும் சந்தனக் கட்டையா மாறுவேன்.

மடையர்கள்

முழு நிலவே! ஏன் பயப்படுகிறாய்? மலரும் வண்டும் சகோதரர் என்றால் மடையர்கள்தான் நம்புவார்கள் கண்ணே!

பாய்ந்துவிடு

இன்பமே! இணங்கிவிடு! வசந்தத்திலே புஷ்பிக்கும் வாசப்புது மலரே! வந்துவிடு என்னிடம். வண்ணத் தாமரையே! வர்ண ஜாலப் பூங்கொத்தே! என் வலிமை மிக்க தோள்களிலே உன்னை வாரி எடுத்துக்கொள்வேன். பாய்ந்துவிடு என் மேல் பைங்கிளியே!

சல்லாபத்திற்கு வா!

இந்த சரீரம் தானே உமக்கு வேண்டும்? என் மேனி யின் மெருகிலே தானே நீ மயங்கிவிட்டாய். உம். அடி மையாக்கிக்கொள் என்னை! யாரோ சொன்னார்களாமே உடல்தான் அழுக்குப்பட்டது உள்ளம் அழுக்குப்பட வில்லை என்று! அப்படியல்ல நான் சொல்லுவது! என் கற்பை உன் காலடியில் வைத்துக்கத் தயாராகி விட்டேன். காமவெறியால் பாய்ந்து வரும் கழுகே! உன் கொடிய நகங்களால் என் இருதயத்தைப் பிராண்டிவிடு. காம போதையில் கருத்திழந்த காண்டா மிருகமே! என்னை விழுங்கு. பஞ்சணைப்பசியால் கொஞ்சி வரும் மலைப்பாம்பே! வாடிய என் உடலை உன் வயிற்றுக்குள் போட்டுக் கொள். உம். தாமதிக்காதே! சூறையாடு என் கற்பை! சுக்கு நூறாக்கிவிடு என் வைராக்யத்தை!

பெண்களை விபகாரப் பதுமைகளாக நினைத்துவிட்ட பேயர்களின் பிரதிநிதியே! ஏன் நிற்கிறாய்? ஏன் தயக்கம்? இதோ நான் தயார். என் பிணம் பேசுகிறது உன்னோடு! என் சவம் அழைக்கிறது உன்னை சல்லாபத்திற்கு. வா! வா! வஞ்சகனே வா! இதோ நான் முத்தனின் காதலி. உனக்கு வெள்ளாட்டி.

விருந்தாக்க!

ஏனடா வேசியாக மாறினேன்? வேடிக்கை விநோதங்களில் காலத்தைக் கழிக்கவா? இல்லை. இல்லையடா இல்லை. வெந்து கொண்டிருக்கும் என் உள்ளத்திலிருந்து கிளம்பும் தீ ஜ்வாலைக்கு உன்னை இரையாக்க! வேதனைக் கனலிலே கூர் தீட்டப்பட்ட வேல் முனைக்கு விருந்தாக்க

பார்!

அன்புக்கரசி என வர்ணித்தாயே, அந்த அரசியின் சரசி வேஷத்தைப் பார்! அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவுருவம்! சமுதாயக் குட்டிச் சுவற்றின் நிழலில் சருக்கி விழுநது உருக்குலைந்து கிடப்பதைப் பார்! அழித்தெழுதாச் சித்திரம்! நாள் தோறும் இங்கு நடமாடும் புதுப் புது ஓவியக் கலா ரசிகர்களாள் திருத்தி எழிதப்பட்டு தெருவில் நாசமாகிக் கிடப்பதைப் பார்!

ஆடிவரும் பொன் விளக்கு; அனுதினமும் தேடி வரும் ஆணழகர் கையில் அகப்பட்டு அணைத்து கிடப்பதைப் பார்! கட்டாணி முத்தழகி! மொட்டாகவே கருகிவிட்டதை பார்!கண்கவரும் ரத்தினத்தில் மண் படிந்து கிடைப்பதைப் ப்ார்! கயவனே! காதகனே! கவிதை பேசிய காதற் புலவே! பார்!! பார்!!!

மாறிவிட்டேன்

உன் காதல் மாளிகையிலே கனகமணிக்கட்டிலிலே, உல்லாச உப்பரிகையிலே ஒய்யார கீதம் பாடியபடி அல்லும் பகலும் இணைபிரியாத அன்புத் தெய்வமாக வைத்திருந்தாய். நான் தான் அவமானச் சாக்கடையில் தொப்பென்று குதித்து கல்லாக மாறிவிட்டேன்.

குரங்கும் எருமையும்

தோட்டத்தை அழிக்க புறப்பட்ட குரங்குகூட சில மலர்களைப் பாக்கி வைத்துவிடும். செந்தாமரைக் குளத்தில் புரளும் எருமை கூட சில பிஷ்பங்களைத் துவைத்து நாசப்படுத்தாமல் விட்டு விடும். குரங்கு மனமும் எருமைப் பண்பும் ஒருங்கே அமையப் பெற்றவனே, உன் கண்ணுக்கு இரையாகாமல் தப்ப எந்தப் பெண்ணுக்கும் உரிமை கிடையாதா? உன் வெறி பிடித்த தர்பாரிலே கற்புநெறி காத்துக்கொள்ளும் கன்னியர்களே வாழக்கூடாது! எட்டாத பழத்தை புளிக்குமென்று சொல்லிவிட்டுப் போகிற குள்ள நரியின் புத்தி கூடவா உனக்குக் கிடையது! முயற்சி திருவினையாக்கும் என்ற முது மொழியை இந்த மோகக் காரியங்களுக்குத் தானு நீ பயன்படுத்த வேண்டும்?

தோகை மயிலாள்

வலிமிகுந்த உடம்பை ஒரு முறைவளைத்து நெளித்துக் கொண்டாள். "வானவில்லோ" என்பர் வர்ணனையாளர் அருகே இருந்தால்! "மான் துள்ளுமா இப்படி" என்பர் ஏடெழுதுவோர்! "ஒரு விநாடி அப்படியே வளைந்து நில் போதும் உலகை விலையாகக் கேட்கும் ஓவியம் தீட்டுகிறேன் என்பான் சித்திரக்காரன் அருகே நின்றால்! அத்தகைய தோகை மயிலாள்!

காதலர் உலகம்

பைத்யம்! ஏதோ காதலர்களுக்கு ஒரு உலகம் கட்டி வைத்திருப்பதாகவும், அந்த உலகத்தில் செத்துப்போன காதலர்கள் குடியேறலாமென்றும் யாரோ ஒரு ஆசைக்காரன் கிறுக்கி வைத்துவிட்டுப் போனான், அதை நம்பி நீயும் பிணமாகிவிடாதே!

குல திலகம்

மூடிக் கிடந்த என் இதயக் கதவுகளைத் திறந்து விட்ட தெய்வம்! என் இருண்ட பாதையிலே ஜோதி விளக்குக் காட்டிய மங்கையர் குல திலகம்! இழிவுப் படுகுழியிலே விழப்போன எனக்கு இறுதி மூச்சு வழங்கி பாரடா பண்பு கெட்ட வீணனே! நீ நடந்து வந்த பாதையிலே உன் காலடிபட்டுக் கசங்கிப் போன மலர் முகவதிகள் எத்தனை பேர்?

முடியாது

இன்பமே! கலங்கதே! இன்று நமக்குக் கடைசி நாள்! கடைசி சந்திப்பு! காதல் பாடும் உன் கண்களை இனி நான் பார்க்க முடியாது! தேன் பொழியும் உன் அதரங்களின் தித்திப்பை இனி நான் சுவைக்க முடியாது!

செந்தமிழே!

கண்ணே! உன்னை சிரித்த முகத்தோடு என் சிந்தை குளிர ஒரு முறை பார்க்கிறேன். எங்கே......என் செந்தமிழே! சிரிப்புக் காட்டு!.........

பாடு

மதுவுரும் உன் இதழ்களை முத்துமிட்டேன். அ... பிடிக்கவில்லை உலகிற்கு—நீதிக்கு—நியாயத்திற்கு! ஆகையால் மரணத்தை முத்தமிடப் போகிறேன். நாம் சேர்ந்து பாடுவோமே அந்தக் காதல் பாட்டு; அதை இனிமேல் எங்கே கேட்கப் போகிறேன். எங்கே—அதைப் பாடு! நீ பாடாவிட்டால் உன் காதலன் நிம்மதியாகச் சாக மாட்டான்! பாடு கண்ணே! பாடு!!!